# செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங், திருச்செங்கோடு

## உலக மகளிர் தின விழா

திருச்செங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரியில் 08.03.2017 அன்று உலக மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது .

இந்த நிகழ்ச்சி கல்லூரியின் தலைவர் திரு.ஜான்சன்ஸ் T.S. நடராஜன் மற்றும் செயலாளர் & தாளாளர் பேராசிரியர் A.பாலதண்டபாணி ஆகியோர் தலைமையில் கல்லூரியின் முதன்மை செயல் அலுவலர் இன்ஜினியர் A.B.மதன் மற்றும் வேலை வாய்ப்பு இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டது. கல்லூரியின் முதல்வர் முனைவர்.R.சதீஷ் குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

விழாவின் சிறப்பு விருந்தினராக திருமதி ஆர்த்தி பரந்தாமன், தலைமை சர்வதேச கொள்முதல், PRD ரிக்ஸ் இந்தியா அவர்கள் கலந்து கொண்டார்.அவர் சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பு பற்றி சிறப்புரையாற்றினார். பெண்களுக்கான சமஉரிமையை கொடுக்க நமது ஆண் குழந்தைகளுக்கு சிறுவயது முதலே சொல்லி வளர்க்க வேண்டும் எனவும் பெண்கள் பல மொழிகளை கற்று பல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் எனவும், சவாலான பணிகளை தேர்வு செய்து அவற்றில் சாதித்து காட்டவேண்டும் எனவும், திருமணம் ஆனாலும் கூட தங்களின் கல்வியின் மூலம் குடும்பம் மற்றும் நாட்டுக்கான பங்களிப்பை நல்க வேண்டும் எனவும் கூறினார். முன்னதாக செங்குந்தர் மகளிர் மேம்பாட்டு மையத்தின் (Dazzling Damsels) ஒருங்கிணைப்பாளர் சத்யா அவர்கள் சிறப்பு அழைப்பாளரை அறிமுகம் செய்தார். பின்னர் மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்வி, விளையாட்டு மற்றும் கூடுதல் கல்விசார் நடவடிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இந்த ஆண்டின் சிறந்த மாணவியருக்கான விருதை உபசனா என்ற நான்காம் ஆண்டு மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் மாணவி வென்றார்.


Sengunthar College of Engineering
Tiruchengode - 637 205
8th March
Women's Day
Dazzling Damsels - 2017
Chief Guest
Mrs. Aarthi Paranthaman
Head - Global Purchase
SENGUNTHAR
EDUCATIONAL INSTITUTIONS
TIRUCHENGODE
EDUCATION EDIFICATION ELEVATION
Estd : 1995